Registered as a news paper at the GPO

# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON

"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும் மேலான வற்றையும் எளிதாகப் புரிந்துகொள்கின்றான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகின்றான்."

தெளிவு - 05 | ஆவணி - ஐப்பசி, 2005 | இதழ் -04

# நம்பிக்கைக்குரிய தலைவரை தேர்ந்துகொள்ளுங்கள்

## சா.பி.கிருபானந்தன்

**நவம்பர் மாதம் நடைபெற இருக்கின்ற தேர்தலுக்காக சகல மட்டத்திலும் போட்டிகள் உக்கிரமடைந்து வருகி றது. வாக்குறுதிகள், விளம்பரங்கள், தம்மைத் தாமே புகழ்ந்துரைப்பதும், பிறரைத் தூற்றுவதும், போற்றுவதும் முன்னிருக்கைக்கு முண்டியடிப் போர் மத்தியில் எமக்கு யார் நல்ல தலைவர். அவர்களது நம்பகத்தன்மைகள் பற்றிய கருத்துப்பரிமாற்றங்கள் மக்கள் மனதை குழப்புவதாகவே உள்ளது.**



இவ்வாறு கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்பணி சா.பி.கிருபானந்தன் அடிகளார் தெளிவுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் - ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவோர் உயிரைத்தவிர மற்றதெல்லாம் தருவோம் என்ற வாக்குறுதிகள் சொல்வதில் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர் அல்ல. இவ்வாறு போட்டியிடுவோர் மத்தியில் எமது எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்களுக்கு விடை தேடி தெளிவு பெற்று, தகுதி காண் தலைவர் யார் என்பதை முதலில் தெரிவு செய்யும் தகமை எம்மிடம் உருவாகவேண்டும்.

இதுவரை எமக்குள் யாரை நல்ல தலைவராக ஏற்றுக்கொண்டோம். உருவாக்கிக்கொண்டோம். எம்மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைமையில் நம்பிக்கைஇழந்துதவறிய பொழுதுகளை மீட்டுப்பார்க் கும் நேரம் இது.

நல்ல தலைவனாக இருக்க விரும்புபவன் பணி விடைக்காரனாக இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட தலைவர்களைக் காணமுடிந்ததா? எதிலும் பாரபட்சம், அதிகார வெறி, பதவி மோகம், அடக்குமுறை போன்ற இழிநிலைகள் கொண்டோரே தலைமைப்பீடம் ஏறுகின்றனர்.

இன்று ஜனாதிபதியாக விரும்புவோர் இயற்கையின் சீற்றத்தாலும்- போரின் வடுக்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டாற்ற போட்டி போடும் தலைவர்களா, அல்லது ஆட்சியைக் கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் தவைர்களா சிந்திப்போம்.

நீதிக்குள் இருக்கும் அநீதி, குரலற்ற மக்களின் குரல்; பக்கச்சார்பற்ற ஆட்சி; மொழி கலாசாரப் பேணுகை; மதத்தின் மீது மதம் கொண்ட போக்கை அகற்றல். மன நிம்மதியான வாழ்வுக்கு சமாதான வழி காணல்; உண்மைக்கு உரைக்கல்லாக இருத்தல்; தொழில் வாய்ப்புப் போன்ற மக்களின் ஏக்கமும் எதிர்பார்ப்புக்களும் நீளும்.

இத்தகைய எதிர்பார்ப்புக்களை வைத்தே ஒரு நாட்டுக்கு தலைவரைத் தேர்ந்தெடுக்க வாக்குகள் போடுகின்றோம்.

எமது வாக்குகள் ஒவ்வொன்றும் பெறுமதியானது. அதனை துஷ்பிரயோகம் செய்ய யாரையும் அனுமதிக்கக்கூடாது.

வாக்கைப் பெற்ற பின்பு வாக்குமாறி நடப்பது அரசியல் யதார்த்தம். இத்தகைய இழி செயல் கொண்ட அரசியல் வாதிகளை காலகாலமாக நாம் கண்டும் உள்ளோம். எம் வாக்கினால் பதவி எடுத்தவர் எம்மை அடக்கி ஒடுக்குவதும் இயல்பு வாழ்வை கெடுப்பதும், எமக்குப் புதிய அனுபவம் அல்ல.

இங்கு தான் இயேசுஎள எமக்கு நல்ல தலைவனாக இருந்து வழி காட்டுகிறார். அவரிடம் பக்கச் சார்பு இல்லை, வகுப்பு வாதம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 160 ஆவது ஆண்டு விழா

கொழும்பு மறைமாவட்டத்தின் 160 ஆவ்து ஆண்டு நிறைவை ஒட்டி காலி பிராந்தியத்தில் நவம்பர் 4 ஆம் திகதி பொனபிற்றார் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் நன்றித் திருப்பலிப்பூசையும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். இந்நிகழ்வுகளுக்கு காலி குருமுதல்வர்லோகேந்திர அபயரட்ண அடிகளார் தலைமை தாங்குவார்.

## 125 ஆவது ஆண்டு விழா

கொட்டகலை புனித மாக்கிரட் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா நவம்பர் 13ம் ஆம் திகதி பங்குத்தந்தை ஸ்ரீபன் ஜெபச் செல்வன் அடிகளார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வுக்கு கொழும்பு மறைமாவட்ட ஆயர் டூலிப் டி சிக்கேரா ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப் பிக்கவுள்ளார்.

## துறவற வாழ்வில் வெள்ளி விழா!



அருட்தந்தை செ.தொபியாஸ் அடிகளார், புனித பிரான்சிஸ்கன் அசிசியார் அருட்சகோதர சபையில் இணைந்து பயிற்சி பெற்று 1980 ஆம் ஆண்டு முதல் பிரமாணிக்கமுள்ள துறவறப் பணியாளனாக விளங்குகின்றார். ஏழ்மை- தியானம் - தாழ்மை- கற்பொழுக்கம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு, இயேசுவை குருநாதராக தன் மனதில் இருத்தி, ஏழை மக் களுக்காக கடந்த 25 வருடம் உழைத்து வரும் தொபியாஸ் அடிகளாரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடை கிறோம்.

மாத்தளை - பதுளை- தலவாக்கலை - உக்குவலை - சிலாபம் என ஓரங்கட்டப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் ஆற்றிய பணிகள் என்றும் மனங்கொள்ளத்தக்கது. 'நீரோடை' ஆசிரியராகப் பணியாற்றிய இவர் 'பாதை' ஆசிரியர் குழு உறுப்பினராகவும் இருக்கிறார். இவர் தெளிவு மீது கொண்ட நட்பினால் தனது ஆக்கத்தினாலும் விமர்சனப் பார்வையினாலும் அடிக்கடி எம்மை தட்டிக்கொடுத்த சந்தர்ப்பங்களை நன்றியுடன் நினைத்துக்கொள்கின்றோம்.

தொபியாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் மேலும் சிறக்கத் 'தெளிவு' வாழ்த்துகிறது.

## வழிகாட்டிகளின் வழிகள் ஏது!

### திருமதி என்.தர்மரட்ணம்

சிறுவர்களை சமூகத்திற்கு பொருத்தப்பாடு உடையவர்கள் ஆக்குவதில் பெற்றோர் ஆசிரியர் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது மிகவும் அவசியம் என்று திருமதி என்.தர்மரட்ணம் உரையாற்றினார்.

நல்லூர் புனித யாக்கோபு ஆலய பெண்கள் அமைப்பு, ஆவணி மாதம் அனைத்து திருச்சபைப் பெண்களையும் இணைத்து மகாநாடு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இப் பெண்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே ஆசிரியர் திருமதி என்.தர்மரட்ணம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றும் போது, சிறுவர்களை வளர்க்கும் போது தேவையில்லாத கற்பனைகளை அவர்கள் மீது திணிக்கக் கூடாது. பிள்ளைகளின் தகைமை களை அறிந்து அதற்கு ஏற்ப அவர்களை தட்டிக் கொடுத்து மேலும் விருத்தியாக்க முயல வேண்டும்.

வீட்டிலே பல பிள்ளைகள் இருக்கும் போது அவர்களிடம் பாரபட்சம் காட்டி, பிரிவினைகளை வளர்த்தல் ஆரோக்கிய மற்றது. தமது ஆரம்பகால அனுபவங்களைக் கொண்டு, பிள்ளைகளும் அப்படியே நடக்கவேண்டும் என்ற திணிப்பும் அவசிய மற்றது.

பெற்றோர் தமது குடும்ப வாழ்வில் வார்த்தை பிரயோகங்களை மிகவும் நுணுக்கமாக பாவிக்க வேண்டும். இதைப் பார்த்தே பிள்ளைகளும் தமது வாழ்வியலை அமைத்துக்கொள்கின்றனர்.

ஓய்வு நேரங்களில் குடும்பமாகச் சேர்ந்து நல்ல காரியங்களில் ஈடுபடுதல் மற்றும் பிள்ளைகள் தனிமையில் இருக்கவோ தனிமையுணர்வு ஏற்படவோ வாய்ப்பளிக் கக்கூடாது.

ஆசிரியர்கள் பிள்ளைகளின் சமூக மயமாக்கலில் முக்கிய ஊடகம். இவர்கள் பிள்ளைகளின் சிறப்புத்தன்மைக்ளைப் போற்று

(4ஆம் பக்கம் பார்க்க)





இலங்கை திருச்சபையின் அனுசரணையுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி, வெற்றிலைக்கேணி, உடுத்துறை பகுதி மக்களுக்கு தொழில் புரிவதற்குத் தேவையான கட்டுமரங்களையும் - வலைகளையும் யாழ். குருமுதல்வர் எஸ்.பி.நேசகுமார் அடிகளார் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## பொன்விழா காணும் கருணா நிலையம்


கிளிநொச்சி கருணா நிலையத்தின் 50 ஆவது யூபிலி ஆண்டு விழா ஒக்ரோபர் 23 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அனுசரிக்கப்படும்.

இதனை முன்னிட்டு நன்றித் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக் கப்படும். இதனை கொழும்பு மறைமாவட்ட ஆயர் டூலிப் டி சிக்கேரா ஆண்டகை நிறைவேற்றுவார்.

திருப்பலி பூசையைத் தொடர்ந்து கருணா நிலைய பிள்ளைகளினால் கண்காட்சியும், கலைநிகழ்வுகளும் நடத்தப்படும்.

# வழிபாட்டிலும் மனித வாழ்விலும் இசை அவசியம்

## ச.யேசுதாசன் அ.ம.தி.



திருவழிபாடும் மனிதவாழ்வும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதே கிறிஸ்தவ வாழ்வு. மனித வாழ்வின் ஊற்றும் மையமுமாய் அமைவது திருவழிபாடு. இவ் வழிபாட்டில் பயன்படும் பாடல்கள் அவ் வழிபாட்டுக்கு மெருகும், ஆழ்ந்த பக்தியும் அளிப்பது மட்டுமன்றி மனித வாழ்வின் உயிரோட்டமுள்ள செயல்களுக்கும் சிந்தனைக்கும் சக்தி கொடுக்கின்றது. சொல்லிலும் செயலிலும் கிறிஸ்தவம் பிரதிபலிக்கச் செய்கின்றது.

இவ்வாறு "மறுமலர்ச்சிப்பாடல்கள்" என்னும் நூல் வெளியீட்டு விழாவில் அருட்சகோதரன் ச.யேசுதாசன் (அ.ம.தி) உரையாற்றினார்.

அமரர் அலிஸ் மனோன்மணி சேனாதிராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினரின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட மறுமலர்ச்சி பாடல்கள் என்னும் நூல் நல்லூர் புனித யாக்கோபு ஆலயத்தில் ஒக்டோபர் 9ம் திகதி வெளியீடு செய்யப்பட்டது. இவ்விழாவில் சிறப்புரையாற்றும் போதே ச.யேசுதாசன் குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

எழுத்துரு தோன்றும் முன்பே தன் கருத்துக்கு இசையுரு கொடுத்தான் ஆரம்ப மனிதன். தன் சிந்தையில் எழுந்த எண்ணங்களை போற்றுதலாய் வேண்டுதலாய் இசையுடன் எழுப்பினான் இயற்கை நோககி. இசையின் ஊடாக இயற்கையை தனக்கு இசையச் செய்தான். இசையினூடாக நெருங்கிய வணங்கிய மனிதனுக்கு இசைந்து கொடுத்தது இயற்கை.

பழைய ஏற்பாட்டில் திருஇசை முதன்மை பெறுவதை நாம் காணுகின்றோம். பழைய ஏற்பாட்டு மக்களும் அரசர்களும் இசையால் இறையோனைப் போற்றினார்கள். புகழ்ந்தார்கள். செய்த நன்மைகளுக்கும் ஆச்சரியம் மிகு செயல்களுக்கும் நன்றிப்பாடல் துதித்தார்கள். இதற்கு திருப்பாடல்கள் சாட்சி, புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் திருஇசை முக்கியம் பெற்றுள்ளதை நாம் காணமுடிகின்றது. திருப்பாடல்களையும் புகழ்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாரப்பாடி இறையவனைப் போற்றிட அழைக்கின்றார் தூய பவுல் (கொலோ 3:16, எபே 5:19). சிறைக்குள் சீலாவும் பவுலும் இறைவனைப் பாடித்துதித்தபோது சிறைக்கதவுகள் வல்லமையால் திறக்கப்பட்டன. கேருபீன்களும் சேராபீன்களும் பாடித்துதித்தபோது சிறைக்கதவுகள் வல்லமையால் திறக்கப்பட்டன. கேருபீன்களும் கடவுளின் மாட்சிமையில் பரிசுத்தர் பரிசுத்தர் எனப் புகழ்ந்துபாடின. தூய பேதுரு வானவருக்கு பின்வந்த திருச்சபையின தந்தையர்களும் திரு இசைக்கு முக்கியத்துவமும் முதன்மையும் கொடுத்துள்ளனர். இறையியல் வித்தகரான தூய அகுஸ்தீனார். "ஒருமுறை பாடுவது இருமுறை செபிப்பதற்கு சமம்" என்று பாடலின் வல்லமையை அதற்குள்ள சக்தியை மனுக்குலத்திற்கு எடுத்துரைக்கின்றார்.

கடவுளுக்கு மாட்சிமை நல்குவதையும் மனிதரைத் தூய்மைப் படுத்துவதையுமே தன் நோக்காகக் கொண்டதே இப்பாடல்கள். இவை திருவழிபாட்டின் முழுமைக்கும், அதன் மகிமைக்கும் மெருகூட்டுகின்றன. இறைவேண்டலை இனிமையாக்கி உள ஒன்றிப்பை ஏற்படுத்துகின்றன. திருவழிபாட்டில் இப் பாடல்கள் உட்புகுத்தப்படுவதால் அவ்வழிபாடு மேலும் மேன்மை பெறுகின்றது. இவை விசுவாசிகளின் மனதில் தெய்வீக பிரசன்னம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
இதழ் - 24 THELIVU

# சாவை எதிர்நோக்கும் வாழ்வு

"காத்திருக்கிறது சாவு
என்ற கருநாகம்
கதறக் கதற என்னைக்
கொத்திக் குதற!"

"கருவறை என்பதே கல்லறையின்
முதல் அறைதான்"

"வாழ்வுக் கடற்கரையில்
கூழாங் கற்கள் நாம்.
ஆண்டவன் வருகிறான்
ஆர்வமாய்ப் பார்த்து
ஆசைப்பட்டதை
அவனே எடுக்கிறான;
அதற்கென்ன மறுப்பு?"

இந்தக் கவிதைத் துளிகள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, சாவைத் தினமும் எதிர்பார்த்த சிறுமி கீதாஞ்சலியின் சிந்தனைகளாக உருவானதே ஆகும்.

1961 ஆம் ஆண்டு ஜீன் மாதம் உத்திரப்பிரதேசத்திலுள்ள மீரட் என்ற நகரத்தில் பிறந்த கீதாஞ்சலி, பெற்றோருக்கு ஒரே பிள்ளை.

இவள் பெற்றோரினால் அதிகமாக நேசிக்கப்பட்டாள். சிறுவயதிலேயே புற்றுநோய் ஏற்பட்டதினால் வேதனைகளையும், சோதனைகளையும் தமது வாழ்க்கையாகக் கொண்டிருந்தாள்.

அனுவனுவாகத் தினமும் செத்துகொண்டு இருந்தவள், தனது சாவை மகிழ்ச்சியும் - துன்பமும் கலந்த நிலையில் எதிர்பார்த்து சிந்திக்கத் தொடங்கினாள்.

பெற்றோர் கவலை அடையக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, அவள் அவர்களை ஆற்றுப்படுத்தும் முயற்சியில் இறங்குகிறாள்.

இவளது வாழ்வில் தனிமையுணர்வுகள் நீண்டது. இதனால் தன்னை ஆற்றுப்படுத்த கவிதைகள் வரைந்தாள். அதனைப் பெற்றோர் பார்த்து கவலை அடையக்கூடாது என்பதற்காக படுக்கை விரிப்பினுள்ளும், அலுமாரிப் பின்புறத்திலும் மறைத்து வைத்தாள்.

துன்பத்தின் அடித்தளத்தில் எழுதப்பட்ட தத்துவார்தச் சிந்தனைகள் பொருந்திய கீதாஞ்சலியின் கவிதைகள், 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் திகதி அவளின் இறப்பின் பின்னரே கண்டுபிடிக்கப்பட்டது.

ஆழமான சிந்தனை கொண்ட இவளது கவிதைகள் தொகுக்கப்பட்டு ஆங்கில நூலாக (Poems of Gitanjali) வெளிவந்தது. இந்தக் கவிதைகளை இரட்சண்யதாசன் "முடிவிலும் ஒரு மோகனம்" என்னும் நூலாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

சாவை வருந்தி அழைப்பது சிலருக்கு சிலகாலத்தில ஏற்படுகன்றது. சிலர் நோயால் அவதிப்படுகின்ற போது அதனை தாங்கமுடியாது "இறைவா என்னை உன்னுடன் அழைத்துக்கொள்" என்று பரிந்துரைப்பதைக் காணலாம்.

கொடும் நோய்கள் ஏற்படும் போது இறைவனைத் தூற்றவும், மறுதலிக்கவும் பின்நிற்பதில்லை. மேலும் இறைவனின் வல்லமையைக் குறித்து கேள்வி எழுப்புகின்றவர்களாகவும் இருக்கின்றனர்.

இங்குதான் கீதாஞ்சலி என்ற 16 வயது சிறுமியின் கவி பேசும் எம்முடன். அவள் இறைவனைப் பார்த்து,

"இன்னல் நெருப்பில் எரிய
என்ன பிழை செய்தேன் நான்?"

என்று கேள்வி கேட்டவள் பின்னர்,

"என்ன செய்தேன்?....
ஏன் இப்படி?.... என்று
உன்னைக் கேட்காத உள்ளம் கொடு"

என்று பரிந்து மன்றாடுகின்றாள்.

மேலும் பிரியாவிடை கேட்டு, நீண்ட பிரியும் வடை பெற்றுச் செல்லும் உறவுகளை எண்ணி இறைவன் மீது கோபம கொள்வதை தவிர்க்க வேண்டும் என்பதை கீதாஞ்சலி தன் பெற்றோருக்குக் கூறும் அறிவுரை மூலம் தெளிவுறுத்துவது எம் மனத்தையும் நெகிழச் செய்கின்றது.

"பிரித்து விட்டாயே
பிள்ளைக் கனியை - என்று
கொதித்த சொற்களைக்
கூறாதே இறைவனிடம்"

இந்த இறை அனுபூதி அனுபவம் எம்மிடம் உருவாகுமா!

நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல, மாறாக எப்படி வாழ்ந்தோம், எம்மால் மற்றவர்கள் எப்படி வாழ்விக்கப்பட்டார்கள் என்பது தான் முக்கியம்.

இன்று கொலைக்கலாசாரம் பெருகி, ஏராளமான உயர்கள் எம் கண்முன்னே பறிக்கப்படுகிறது. உயிர் ஓர் அற்பப்பொருளாக மாறிவிட்டது. இந்த மரணங்கள் மலிந்த பூமியில் நாம் அறம் சார்ந்த நிலையில் இதய சுத்தியுடன் வாழ்வை முன்னெடுக்க வேண்டியது அவசியமானது.

பிறந்தவர் அனைவரும் இறப்பது இயற்கை. இந்நியதிக்காக பிறர் உயிரை பறிக்க யாருக்கும் உரிமையில்லை. அதேபோல ஒருவர் தானே தன்னுயிரை பறிக்கவும் உரிமையில்லை.

ஆகவே நாம் வாழும் காலத்தில் நல்லதைச் செய்வது எமது கடமை. நவம்பர் மாதம் இறந்த ஆத்மாக்களின் திருநாளைக் கொண்டாடுகின்றபோது, இறந்தவர்கள் காட்டிச் சென்ற அற வழிகள், உயர் ஒழுக்க நெறிகள் போன்றவற்றைப் பின்பற்றி வாழ்வோம் என உறுதி பூணுவோம். இதன் மூலம் இறந்தும் வாழமுடியும். இதுவே உயிர்ப்பின் உள்ளார்ந்த அர்த்தமாகவும் அமையும்.

வாழும் உரிமை அனைவருக்கும் உண்டு என்பதை மறந்துவிடாது பறரை வாழ வைப்போம், பிறர் மேம்பாட்டுக்காக உழைத்திடுவோம்.

- ஆசிரியர்.

# இயற்கையில் இறைவனைத் தேடுங்கள்!

யோசப்பாலா

இயற்கையின் சீற்றம் எமக்கு எதனைக் கற்பிக்கிறது! இயற்கையை படைத்த இறைவன் அதனை அனுப வித்து மகிழ எம்மைப் படைத்தாரே தவிர இயற்கையின் சமநிலையைச் சீர்குழைக்கப் படைக்கவில்லை.

அறிவு படைத்த மனிதன் இறைவனை மறந்தான். தனது மமதையால் நவீன சாத்தான் களை உருவாக்கினான். அவை அணு ஆயுதங்கள் என்றும், போதைப் பொருட்கள் என்றும், அழிவுக்குரிய இரசாயன கலவைகள் என்றும் பெருகின.

இதைமட்டுமா மனிதன் உருவாக்கினான். இன்பவாழ்வுக்கு பிழையான வியாங்கினம் கண்டு; பாலியல் வன்முறைகளையும், சமூகச் சீர்கேடுகளையும் உருவாக்கினான்.

உலக அரங்கில் பல்வேறு முகங்களுடன் சாத்தான்கள் வலம் வருகின்றன. இவை இயற்கை அன்னையைச் சீண்டி நிற்பதை மனிதன் மறந்து செயற்படுவது தான் வேதனை.

உலகெங்கும் போர் - பெருவெள்ளம் - பூகம்பம் - சூறாவளி- வரட்சி- கொடிய நோய் போன்ற காரணங்களினால் தினமும் அகதிகளாக அல்லலுறும் மக்கள் -உயிரிழப்புக்களைச் சந்தித்தும் சொத்துக்களை இழந்தும் நிற்கும் அவலநிலை தொடர்கதையாகவே உள்ளது.

"நான் சொல்பவற்றைச் செய்யாது என்னை ஆண்டவரே ஆண்டவரே என ஏன் கூப்பிடுகி றீர்கள்? என்னிடம் வந்து என் வார்த்தைகளைக் கேட்டு அவற்றின் படி செயற்படும் எவரும் யாருக்கு ஒப்பாவார் என உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன். அவர் ஆழமாய்த் தோண்டி பாறையின் மீது அடிமைத்தனம் அமைத்து வீடு கட்டிய ஒருவருக்கு ஒப்பாவார். வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து அந்த வீட்டின் மேல் மோதியும் அதை அசைக்க முடியவில்லை." (லூக்கா 6:46-48) இவ்வாறு இறைவார்த்தையில் பல முறை எச்சரிக்கப்பட்டுள்ளது. மனித மமதை சாத்தான்களாக மாறி அழிவின் விழிம்பில் நின்று கொண்டிருப்பதைக் காணலாம்.

ஏன் இந்த இழிநிலை ஒவ்வொரு மனிதனும் ஆழமாக சிந்திக்க வேண்டிய நேரம் இது. காரணம் இவற்றுக்கு யாரோ அல்ல. நானும் நீயும் இதற்குள் வாழ்வதால் மௌனித்து ஒதுங்குவதால் இறை உறவில் அந்நியப்பட்டு இருப்பதால் இக் கோர நிகழ்வின் பங்காளராக உள்ளோம்.

எமது சொல் செயல் வாழ்வில் எந்த ஒரு சிறிய செயலும் தினமும் நன்மைத்தனமாக பிறர்துயரில் பங்கேற்பவராக குரலற்ற மக்களின் குரலாக இருத்தல் வேண்டும்.

தவறிளைப்போரைவிட அத னைக் கண்டு மௌனித்து இருப்போரும் அதன் பங்காளரே என்பதை மறந்துபோகாது, மற்றவர்களுக்காக வாழ்வது சிறந்தது.

எமது அயல் நாட்டில் பூகம்பம் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் மாண்டு போயின. இதனைக் கேள்விப்பட்டதும் எமது உணர்வு ரீதியாக இரக்கம் ஏற்பட்டதா? இறைவனிடம் இரந்து வேண்டிக் கொண்டோமா?

இவ்வாறு பல நாடுகளிலும் சூறாவளி - பூகம்பம் - வெள்ளப் பெருக்கு- மண்சரிவு - வறட்சி- வெப்பம் - சுனாமி என்று இயற் கையின் சீற்றங்கள் தினம் தினம் கோரத்தாண்டவம் ஆடுகின்றது. இதைவிட எமது சொந்த நாட்டில் அமைதியற்ற நெருக்கடிகள், பல்வேறு சமூக சீர்கேடுகள், மற்றும் இவற்றின் மத்தியில் எம் கண் முன்னே எத்தனையோ நீதியற்ற- நேர்மையற்ற - உண்மைக்கு புறம் பான பல்வேறு தவறுகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

இவற்றின் மத்தியில் எமது மனம் இரக்கமற்று வீண்கேளிக்கைப் பொழுதுகளில் களிந்து போவது குறித்து உணர்ந்திருக்கின்றோமா? எதிரிக்காக இரங்குங்கள். மனமாற்றத்துக்காக உழையுங்கள், பகைவரையும் அன்பால் வெல்லுங்கள் குரலற்ற மக்களின் குரலாக மாறுங்கள். உன்னைப் போல் உன் அயலவனையும் நேசியுங்கள் என்பது எல்லாம் வார்த்தை வடிவங்க ளோடு இருப்பதற்கு மட்டும் தானா? இல்லை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் இவற்றைச் செய்ய எமக்கு தரப்படும் சந்தர்ப்பம் என்பதை உணர வேண்டும்.

இயற்கையுடன் உறவாடி இறைவ்னைத் தரிசித்த எம் முன்னோர், ஞானிகள், முனிவர்கள் எதிர்கால சந்ததிக்காக இயற்கையை பாதுகாத்து தந்த அரியவற்றை சுவைத்தோமா? காத்தோமா? அல்லது அழிப்பதில் பாடுபட்டோமா? அல்லது அழிவைக் கண்டு மௌனித்து ஒதுங்கி வாழ்ந்தோமா? இன்று இயற்கையின் சீற்றம் தரும் பாடம் என்ன? இறைவன் தரும் செய்தி என்ன? இறந்தவர்கள் எல்லாம் பாவிகள் நாங்கள் எல்லாம் நீதிமான்கள் என்ற ஆணவமா? இந்த கேள்விகளை எமக்குள்ளே கேட்டு எம்மை நாமே மீள் பார்வை செய்து மனமாற்றம் பெற்று இயற்கையைப் பாதுகாத்து இறைவனுக்கு பணிவிடை செய்ய முயற்சிப்போம்.

# உலக தேவன்

விண்மீன்களின் மாட்சியே
விண்ணுக்கு அழகு
யேசுவின் சாட்சியே
உலகுக்கு பெருமை

வானவில் தனது மாட்சியாலே
வானமதை சுற்றி வளைக்கும்
உன்னத யேசுவின் கைகளே
உலகமதை விரித்துவைத்தது

தாயின் வயிற்றில் உருவெடுத்தவரே
பிறந்ததும் நிலம் எனும் தாயிடம்
உள்ளடக்கப்படும் வரையில்
உலகினை மெய்மறக்க செய்தார்

தேவனிடம் தோன்றியதாலே
எம்மிடம் புகுந்தது இரக்கம்
இரக்கம் என்பது ஓர்
நலம் மிகு பூங்கா போன்றது

இறைவனோடு உரையாடுதலே
ஆத்மாவிற்கு அமைதி
இறை மகனோடு உரையாடுவது
முழு உலகுக்கு அமைதி

வாழ்கை கோலமதிலே
பலவர்ணமாக நற்குணங்களையும்
முத்துப்போன்ற சொற்களையும்
உள்ளத்திலிருந்து பாய்ச்சினார்

உலகமெனும் சில்லு உருண்டோடவே
அது மேடுபள்ளத்தில் விழாமல்
தடுத்து தமது மாட்சிமிகு கைகளை
தாமரை போல விரித்தார்

இருளுக்கு விளக்காய் இருந்தவரே
உலகுக்கும் ஒளியாயிருந்தார்
இராவானில் உலா வரும்
விண் மீனை சிரிக்க வைத்தவர்

பசுமை நிறை புற்களே
உங்களுக்கும் நிறத்தைத் தந்தார்
உருண்டை உலகமதில்
அன்பு சாயத்தை ஊற்றினார்

உடலை அப்பமாக தந்தவரே
உயிரையும் உறவாக தந்தார்
கொடுமை எனும் சிலுவையில்
அன்பு கோவிலாக அறையப்பட்டார்

வாழ்க்கை படகினிலே
துடுப்பாக இயங்கினார்
உருண்டோடும் உலகினில்
உலக தேவனாக பிரகாசித்தார்

பாடிக்கொண்டு வரும் நீர்வீழ்ச்சியே
அவர் மாட்சியை உலகில் பாடிடு
வண்டுடன் பேசும் மலரே
அவரை உலகமதில் புகழ்ந்திடு

J.லூட்ஸ் ஆன்கிறேஸ், புத்தளம்.

# பிரச்சினை என்பது என்ன?

பிரச்சினையை பிரச்சினையாக எண்ணுவது எம் மனங்களைப் பொறுத்தது. எங்கு தான் இல்லை பிரச்சினை. குடும்பத்தில் இல்லையா? பாடசாலையில் இல்லையா? அல்லது ஆலயங்களில் தான் பிரச்சினை இல்லையா? பிரச்சினையை உருவாக்குவதே மனிதர்கள் தான். அதனைப் புரிந்து கொள்ளாததும் மனிதன் தான். எது எப்படி இருந்தாலும் எமது பிரச்சினையை நாம் தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். தீர்ப்பது எப்படி?

முதலில் என்னை நான் புரிந்து கொள்ள வேண்டும். நான் யார்? என்னிடமுள்ள ஆற்றல்கள் எவை? என்னால் என்னைப் புரிந்து கொள்ள முடிகிறதா? என்னை நானாக எனது குறைகளோடும் நிறைகளோடும் ஏற்றுக் கொள்ள முடிகிறதா? என்னை நினைத்து நானே அச்சம் கொள்கிறேனா? மற்றவர்கள் என்னைப் பிழையாக எண்ணிக் கொள்வார்கள் என எண்ணி என்னை நானே ஏமாற்றுகின்றேனா? பணம், பதவி,பட்டம், சாதி, மதம் என்ற போர்வையால் மூடப்பட்ட மனிதன் தன்னைப் புரிந்து கொள்ளும்வரை பிரச்சினைகள் தலைதூக்கிக் கொண்டே இருக்கும்.

தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது
யூத நிலத்தினிலே
சத்திய வேதம் நின்று நிலைத்தது
தாரணி மீதினிலே
எத்தனை உண்மை வந்து பிறந்தது
யேசு பிறந்ததிலே
இத்தனை நாளும் மானிடன் வாழ்வது
யேசுவின் வார்த்தையிலே

எனவே எம் மனங்களைத் தூய்மைப்படுத்தவும், ஒரு நிலைப்படுத்தி இறை வார்த்தையை விசுவசித்து வாழ்வும், யேசுவின் அருள் வேண்டி நிற்போம்!

யே.சயந்தினி - 12 (கலை) 2006
செட்டிக்குளம் மகாவித்தியாலயம்.

# தடை தகர்ப்போம்

அன்றாடம் தள்ளாடும் மாந்தர் நிலைகண்டு
அனுதாபப்படுவதால் என்ன இலாபம்
அல்லலுறும் ஏழையின் வாழ்வில்
அன்புகாட்டி தடை தகர்ப்போம் – மானிடா!

தாகம் எனக்கென சாற்றியவருக்கு கடற்காடியைக் கொடுத்து
தாகசாந்தி அளித்த ஐந்தறிவு மாக்கள் போல் அல்லாது
தவித்திடும் ஏழையின் துயர் துடைக்க
சமத்துடன் செவ்வாழ்வு வாழ்ந்திடுவோம் – மானிடா!

அருட்சகோதரி: பி.பப்ரிஸ்ரா
மாத்தளை.

# புகைத்தல்

சரீரத்தை புகைக் காடாக்காதே! ஓ! அந்த துர்நாற்றம்! வாகனங்களில் பிரயாணஞ் செய்யும் போதும் பெரிய தொல்லை. இதைச் சுவாசிப்பது சுகாதாரத்திற்கும் கெடுதி. இந்த வஸ்துக்களை அதாவது சிகரெட் சுருட்டு புகையிலை முதலியவற்றை வாங்கும் பணம் புகையாய் போய்விடுமே!! என்ன நிர்ப்பந்தம்!! புகைப்பதை அடியோடு விட்டுவிடு. தேகத்துக்கு ஆரோக்கியம் தரும் பொருட்களை வாங்கி உட்கொள். புகைப்பதற்கு பணத்தை வீணாய் செலவழிப்பது பெரும் நஷ்டம். இனி இதில் நாட்டம் வைக்காதே! அடியோடு நிறுத்திவிடு இப்பழக்கத்தை.

திருமதி R.S. தேவதாஸ்
புனித மாற்கு ஆலயம், பதுளை.

# கடவுளைத் தேடுவோம்....

இறைவனின் செயல்கள் எமக்கு வியப்பை அளிக்கின்றது. ஆனால் வழிபாட்டில் என்னை சூழ உள்ளவற்றை ஒருமுறை நோக்கும் போது புனிதர் பெனடிக் கேட்டதுபோல நாமும் எம்மையே பார்த்துக் கேட்க வேண்டும் நான் ஏன் இங்கு வந்தேன்?

பொழுதைக் கழிக்க. இன்பமாக சிரித்து கதைத்து பழக வந்தோமா? ஓர் வகை மக்கள் கூட்டத்துடன் இணைய வேண்டும் என்று கருதி வந்தோமா? எமது எதிர்கால நோக்கங்கள் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக வந்தோமா? இல்லாவிட்டால் ஏழைகள் வறுமையால் வாடுவோருக்கு தேவைகளுடன் இருப்போருக்கு உதவவேண்டும் என்று திருமறை சொல்வதால் வந்தோமா? இவைகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்து வந்திருந்தாலும் பிழையில்லை. மாறாக இவை யாவும் எமது சமய வாழ்வுக்கு போதுமானது அல்ல.

இறைவனுக்குள் இவற்றைத் தேடாமல் இறைவனுடன் இணைந்து இவற்றைத் தேடுங்கள். மேலுள்ளவற்றை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படுவோமானால் இச் செயல் நிறைந்தவுடன் இறைவனைத் தேடுவதை நிறுத்திவிடுவோம். ஏனெனில் சமூகத் தேவைகளை மாத்திரம் கருத்தாய்க் கொண்டு செயல்படும் போது அவை கிடைத்ததும் வந்த வழியை மறந்து விடுகின்றோம்.

இறைவனுடன் இணைந்து இவற்றைத் தேடுங்கள். அப்போது சமூகத்தில் வாழும் இறைவனைக் கண்டடைவீர்கள்.

(வடமாகாண பிரான்சிஸ்கன் சகோதர சபை நண்பர்கள் - ஹெந்து 2004)

அருவடையோ மிகுதி வேலையாட்களோ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை, பயங்கரவாதச் சூழலில் கிறிஸ்தவ அருள்தொண்டு பணி

பேராசிரியர் தியான்சந் கார் அடிகளார்

**முன்னுரை**

'லண்டன் மாநகரில் இரயில் பயணிகள் மீது குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் - பலர் உயிரிழப்பு , நூற்றுக் கணக்கானவர் படுகாயம்'

'அமர்நாத் என்ற இமயமலைச்சரிவு புண்ணிய தலத்துக்குச் சென்ற யாத்ரீகர்கள் இஸ்லாமிய அடிப்படைவாதப் பயங்கர வாதிகளால் தாக்கப்பட்டனர்.'

'ஈராக்கில்அபுகாரிப் என்ற சிறைக்கைதிகள் அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்டனர்.'

'யோட்டிப் போராளி இயக்கத்தைச் சேர்ந்த நபர் சைக் கிளில் சந்தைக்குச் சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார்.'

'ஒரு கல்லூரியின் தலைவர் போராளிகளின் அத்துமீறிய வன்முறைச் செயல்களை பகிரங்கமாகக் கண்டித்ததால் பட்டப்பகலில் சுட்டுக்கொலை.'

'ஒரு பாலர் பள்ளி வகுப்புக்குள் திடீரென்று ஒரு வாலிபன் துப்பாக்கியுடன் நுழைந்து கண்மூடித்தனமாகச் சுட்டதால் ஆசிரியையும், வகுப்பின் பிள்ளைகள் 30 பேரும் உயிரிழந்தனர்.'

இவ்விதக் கொலைச் செய்திகள் நாளுக்குநாள் உலகெங் கும் அதிகரித்து வருகின்றன. இவைமட்டுமல்லாமல் தங்கள் சொந்தக் குடிமக்கள் மீதே சட்டம், ஒழுங்கு காக்கும் நடவ டிக்கை, தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் பொதுமக்க ளுக்கு எச்சரிக்கை நடவடிக்கை என்ற போர்வைக்குள் ஒளிந்துகொண்டு அரசுக்குஎதிர்புணர்வுள்ளவர்கள் என்று கருதப்படும் மக்கள் மேல் துப்பாக்கிச் சூடுகளை நிகழ்த்துவ தும், குண்டுமழை பொழிவதும் நாங்கள் அறிந்த அண்மைக் கால வரலாறு.

வன்முறைச் சூழல் இவ்வாறு பல நிலைகளில் பழக் கமான சூழலாகி வருகிறது. இதற்குத் தீர்வு என்ன? கிறிஸ் தவ அருள்தொண்டு பணியின் மூலம் நீதியினால் விளையும் அமைதியை நாம் எப்படி ஏற்படுத்த முடியும்? இதுவே இந்த அமர்வின் செம்பொருள்.

இந்த அதி முக்கியமான கேள்விக்கு நாம் விடை தேட வேண்டுமானால் வன்முறை, பயங்கரவாதம் ஆகியவற்றின் முழுவடிவத்தையும் நாம் காணவேண்டும்.திடீரென்று வெடிக் கும் வன்முறைச் செயல்களை செய்தித்தாள்கள், தொலைக் காட்சி மூலம் அறிந்துகொள்கிறோம். ஆனால் அவற்றில்கூட சில வன்முறை, பயங்கரவாதம் என்று பெயர் சூட்டப்படுவ தில்லை. குறிப்பாக அரசின் அமைப்புகள் ஈடுபடும் வன்முறை செயல்கள் சட்டம் ஒழுங்கு காக்க, பொது மக்களுக்கும் பொது சொத்துக்கும் பாதுகாப்புத்தர நடத்தப் படுகின்ற தேவையான பலத்தின் பயன்பாடு என்றே கருதப் படுகிறது. இந்தத் தீர்ப்பு சரிதானா என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். இவை மாத்திரமல்ல, பல வன்முறைச் செயல்கள் செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி மூலம் மக்கள் கவனத்திற்கு வருவதே கிடையாது. (Domestic Violence) என்றழைக்கப்படுகின்ற இல்லங்களில் மனைவியரோ, பிள்ளைகளோ அல்லது வீட்டு வேலையாட்களோ வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆளாவது இத்தகையது. இவற்றோடு சமூக அநீதிகளாய் நடைபெறும் வன்முறைச் செயல்க ளையும் நாம் கணக்கிலெடுக்க வேண்டும். குறைந்த கூலி, வேலையின்மை ஆகிய அநீதிகள் பசியையும் பட்டி னியையும் பலருக்குத் தொடர் அனுபவங்களாக்குகின்றன. பட்டினிச்சாவு களும், பட்டினித்தற்கொலைகளும் ஒருபுறம் நடக்கின்றன. மற்றொரு புறத்தில் பசி, பட்டினியால் மனித மாண்பு சிதை யுற்று சில வாலிபர் கோப உணர்வுகளுக்குள்ளாகி வன் முறைச் செயல்களில் ஈடுபட்டு. தங்களை அநீதியாக நடத் தும் சமுதாயத்திடம் பழி தீர்த்துக்கொள்ள விளைகிறார்கள். இவ்வாறு பலதரப்பட்ட சூழலில் வன்முறைச் செயல்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் இன்று அதிகமாக வல்லரசுகளை உலுத்தவது அவர்களு டைய அராஜகத்தைக் கண்டிக்கும் வகையில் சில தீவிர வாதக் குழுக்கள் நடத்தும் திடீர் தாக்குதல்களே, ஆங் காங்கே குண்டு வெடிப்புகள், ஆங்காங்கே பணயக்கைதி களாகச் சிலரைப் பிடித்து வைத்து பேரங்கள் நடத்துகையில் ராணுவமோ அல்லது தீவிரவாதிகளோ துப்பாக்கிச்சூட்டில் இறங்குவதால் பணயக்கைதிகளுக்கு ஏற்படும் உயிரிழப்பு, படுகாயம், இன்னபிற நடவடிக்கைகள் மட்டுமே பயங்கரவாதச் செயல் அல்லது வன்முறைச் செயல் என்று தீர்க்கப்பட்டு, அதற்கான எதிர், காப்பு நடவடிக்கைகள் என்ற பெயரிலும் பல கொடுமைகள் நடந்த வண்ணமிருக்கின்றன.

நம்முடைய சிந்தனையின் வட்டத்துக்குள், அப்பாவி மக்களுக்கு எதிராக அவர்கள் உயிருக்கும் உள்ளத்துக்கும் பாதிப்பு ஏற்படும் படி செய்யப்படுகின்ற எல்லாச் செயல்களும், அவற்றுக்குப்பின்னால் அரசின் சக்திகளோ, சமயத்தின் பலமோ எது விரும்பினாலும் அவை யாவற்றையும் பாகுபாடி யின்றி வன்முறை என்றோ, பயங்கரவாதப்போக்கு என்றோ சொல்லவேண்டாம்.

இனி இவ்விதக் கொடூரச் செயல்களுக்கு உந்துதல் அளிக்கும் கருத்துக் கருவூலங்களின்வேர்களையும் சமூகப் பின்புலத்தையும் அடையாளம் காண முயல்வோம்.

**01. தனி மனிதக் கொடூரச் செயல்கள்.**

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அடிக்கடி உல கத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தும் கொடூரங்களை வாலி பரும், இளம்பிராயப் பள்ளிச்சிறுவர்களும் நிகழ்த்திய செய்தி கள் வந்தவண்ணமிருக்கின்றன. கையில் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு பள்ளி வகுப்புக்குள் நுழைந்து தாறுமா றாகச் சுடத்தொடங்கி வகுப்பின் சிறார்களையும் ஆசிரியையும் சுட்டு வீழ்த்துவதும் முடிவில் தன்னையே சுட்டுக்கொன்று மாய்வதும் என்ற ஒரு வடிவிற்குள் அடங்கிய படுகொலைகள் பல நடத்திருக்கின்றன.

பெண்கள் மீது எப்படியோ ஏற்பட்டுவிட்ட வெறுப்புக்கு அடிமையாகி தொடர் கொலைகளைச் செய்பவர்களைக் குறித்தும் கேள்விப்படுகிறோம்.

இப்படிப்பட்ட குரூர நிலைக்கு மனிதர் தள்ளப்படுவதேன்? பெரும்பாலும் இந்தக் குரூரர்கள் சிறுவயதில் பெற்றோருடைய புறக்கணிப்புக்கோ அல்லது அடி உதை மிரட்டல்களுக்கோ ஆளானவர்களாக இருக்க வேண்டும். தந்தை தன் தாயை அடிப்பதையும், உதைப்பதையும் பார்த்த சிறுவன் தானும் இவ்வாறு நடந்துகொண்டால்தான் அப்பாவுக்கு அடங்கிய தாயைப்போல எல்லாப் பெண்களும் தனக்கு அடங்குவர் என்றோ அல்லது மற்றவர் படும் துன்பத்தைக் கண்டு மன நிறைவு பெறும் ஒரு பெரும் திரிபுநிலைக்குட்படுதலோ காரண மாயிருக்கலாம்.

எனவே, இப்படிப்பட்ட பிரச்சினைக்கு ஒரே தீர்வு - பிள்ளைகள் இளவயதில் நல்ல சூழலில் வளர்க்கப்படுதல் எனலாம். ஆனால் அது மட்டும் போதாது. இன்று கைத்துப் பாக்கிகளும், வேறு கொலைக் கருவிகளும் எளிதில் யாருக் கும் வயது வித்தியாசமின்றிக் கிடைக்கிறது. துப்பாக்கியைக் கையாள்வது ஒருவித இன்பக் கிளர்ச்சியை இளவயதிருன ருக்குத் தருகிறது. இதை எளிதில் தவிர்க்கலாம். ஆனால் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் (Gun Loveley) என்ற ஒரு அரசியல் செல்வாக்குமிக்க பணக்காரர் கூட்டம் துப்பாக்கி விற்பனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு வதைத் தடுத்துக்கொண்டேயிருக்கிறது.

**02.போர்க்குணமும் போர்களுக்கான அரசியல் சிந்தனைகளும்.**

போர்களில் படுகாயமுற்று அங்கங்களை இழப்பவர்கள், உயிரிழப்பவர்கள் ஆகியோரை வன்முறைப் பலியாடுகள் என நாம் பார்ப்பது கிடையாது. ஆனால் மனித நாகரிக வரலாற்றில் கடந்த பல ஆயிரம் ஆண்டுகளாகப் போர்களால் ஏற்பட்டிருக்கக் கூடிய கொடூரங்களை பட்டியலிட்டு விவரிக்க முடியாது.

இரண்டாவது உலகப்போரின் முடிவில் தோன்றிய ஐ.நா.சபைதான் முதன் முதலில் போர்கள் சட்ட விரோத மானவை என்று தீர்த்தது. இருந்தாலும் இது ஒரு காகிதச் சட்டமே ஒழிய, இன்னமும் அந்தச் சட்டத்தை மீறுகிற எந்த நாட்டுக்கும் எந்தத் தண்டனையையும் ஐ.நா.சபையால் தர முடிவதில்லை.

போர்க்குணம் மக்களுக்குத் தேவையென்று தொடர்ந்து பேசப்படுகிறது. விளையாட்டில் மிகத் திறமைசாலியாக இருந்தால் மட்டும் போதாது, வெற்றிபெற்றே தீரவேண்டும் என்ற உத்வேகம் திறமையைவிட அதிமுக்கியமானது என்று கருதப்படுகிறது. அதற்கு (Killer Instrict) என்று பெயரும் சூடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுடைய பெருமை மிகவும் தாழ்ந்திருந்த நாள்களில்தான் நான் உயர்நிலைப் பள்ளியில் படித்தேன். அப்போது தமிழ்த்தாகம், தமிழர் பெருமை போன்ற உணர் வுளை தமிழாசிரியர்கள் தட்டியெழுப்ப ஆரம்பித்தார்கள். அப்போதெல்லாம் அதிகம் பேசப்பட்டது, இமயம் வரை படையெடுத்துச் சென்று அநேக வடக்கத்திய அரசர்களை வென்ற சேரன் செங்குட்டுவன், கங்கையிலிருந்து நீரை குடம் குடமாகப் பெண்களின் [illegible] வரப் பண்ணி அதைக் கொள்ளிடத்தில் கொட்டிய கங்கை கொண்ட ராஜராஜசோழன், ஈழத்து மகிபனை மடங்கடித்தப் பாண்டிய மன்னனின் பெருமை என்று போர் வெறியும் அந்நிய நாடுகளை அடக்கி ஆள்வதில் பெருமையும் கொண்ட தமிழ் மன்னர்களின் வரலாறுகளை தமிழாசிரியர்கள் திரும்பத் திருப்பச் சொல்லி எங்களுடைய தமிழ் உணர்வு கிளர்ந் தெழச் செய்தனர். ஆனால் எவருமே அந்நிய நாடுகளின் மேல் படையெடுத்துச் செல்வது அநியாயமல்லவா? அந்த நாட்டு வளங்களைச் சூறையாடுவதும், அந்த நாட்டுப் பெண் களைத் தங்களுடைய போகப் பொருளாகக் மாற்றிக்கொள்வதும் அக்கிரமச் செயலாயிற்றே? என்ற கருத்துக்களை வெளியிட்ட தேயில்லை.

இன்றும் நீதிக்கான அறப்போராட்டங்களில் மக்கள் உற்சா கத்துடன ஈடுபடவேண்டுமானால் அவர்களுக்குப் போர்குணம் தேவை என்றே தயக்கமின்றிப் பேசப்படுகிறது. கடந்த மூவா யிரம் ஆண்டுகளில் போர்களினால் விளைந்த இன்னல்களைக் கணக்கெடுக்க முடியுமா? போரில் ஆயுதம் தாங்கிய படையி னர்தான் மோதிக்கொள்கிறார்கள் பாதிப்புக் களைச் சந்திக்கி றார்கள். தங்களுக்கு என்ன நேரிடக்கூடும் என்பதை அறிந்தே ராணுவத்தில் சேருகின்றன. அவர்களைக் குறித்து நாம் ஏன் கவலைப்படவேண்டும் என்ற வாதமும் முன்வைக்கப்படு கிறது. போரையும் ஏனைய வன்முறைச் செயல்களையும் ஒரே தராசில் நிறுத்தக்கூடாது என்று பேசப்படுகிறது.

ஆனால் இரண்டாவது உலகப்போர் நடக்க முன்னர் 60 லட்சம் யூத மக்கள் இனப்படுகொலையானார்கள். குண்டு வீச்சுத் தாக்குதல்களால் போர் வீரர் மட்டுமல்ல பெருமள விற்கு நிராயுதபாணிகளான பாமரரே அதிகம் பாதிக்கப் பட்டனர். அணுகுண்டு வீச்சுக்கு லட்சக்கணக்கான ஜப்பானி யர் பலியானார்கள். ஈராக் போர் நடந்த போது (Carpet Bowling) என்ற முறையில் சரமாரியாகக் குண்டுமழையை ஈராக் நாட்டின் நகரங்களின் மேல் பொழிந்தது. அமெரிக்கா; வெளியிட்டறிக்கை செய்யாவிட்டாலும் குறைந்தது 50 ஆயிரம் ஈராக் மக்கள் பலியானார்களென்று கணிக்கப்படுகி றது. போர்கள் உண்மையில் ஓயவேண்டுமானால் ஆயுதக் குவிப்பும், தேவையற்ற பெரும் பாதுகாப்புச் செலவும் தவிர்க்கப்பட வேண்டும். ஆனால் அமெரிக்காவின் பொருளா தாரமே ஆயுதங்களை உற்பத்தி செய்து, வியாபாரம் செய்து லாபம் சம்பாதிப்பதில் தான் தழைக்கிறது. அதனால் ஆயுத விற்பனையை மேம்படுத்துவதற்கென்றே வளரும் நாடுகளில் உள்நாட்டுக் கலவரங்களையும், சமய இனங்களிடையே மோதல்களையும், அண்டை நாட்டு உறவுகளில் உரசல்க ளையும் அமெரிக்க உளவுத்துறையான CIA தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறது.

**சமய உணர்வுகளும் சமயம் பூசும் நியாய முலாம்களும**

இன்று சமயங்களைக் குறித்துச் சிந்திக்கும் போது இரண்டு பெரும் தவறுகளைச் செய்கிறோம். முதலாவதாக, பல்சமய உரையாடல் சூழலில் எல்லாச்சமயங்களும் அன்பு நெறியையும், மனித நேயத்தையும், சர்வசமய சமத்துவ உணர்வையும்தான் போதிக்கின்றன என்று மேலெழுந்தவாரி யாகப் பேசுகிறோம். அதோடு சில பயங்கரவாதச் செயல்க ளுக்கு அடிப்படை வாதம் உந்துதலாயிருப்பதைச்சுட்டி, பழியை மொத்தமாக அடிப்படை வாதிகளின் மேல் சுமத்து கிறோம். இரண்டாவது, பெரும் தவறு சமயங்கள் ஆதிக் கங்களை ஆதரித்து அவைகளுக்குப் பூசும் நியாய முலாம் களை நம்மில் பெரும்பாலர் கண்டு கொள்வதேயில்லை.

எல்லாச் சமயங்களும் உள்வட்டம், வெளிவட்டம் என மனுக்குலத்தை இருகூறாகப் பிரிக்கின்றன. உள்வட்டத்தின ருக்கு ஒரு நியாயம். வெளிவட்டத்தினருக்கு மற்றொரு நியாயம் என்பது ஏற்கப்பட்ட பாகுபாடு. அப்புறம் எப்படி சர்வசமய சமத்துவ உணர்வு மேலிடமுடியும்?

அதுமாத்திரமல்ல, அகிம்சையின் அடிப்படையில் இயங்கும் புத்த சமயம் உள்ளாக அனைத்துச் சமயங்களும், அகிம்சைக் கொள்கையை தங்கள் சமய, சமய நிறுவனப் பாதுகாப்பு என்று வரும்போது, விட்டுக்கொடுக்க ஆயத்தமா கவே உள்ளன. சமயப்பாதுகாப்பு உணர்வு, சமய - இனம் பாதுகாப்பாக மாறும்போது அகிம்சை உணர்வு முற்றும் கைவிடப்படுகிறது. கிறிஸ்தவம் யூத இனப்படுகொலையை பாதுகாப்புணர்வினால் ஆதரித்தது. புண்ணியத்தலங்களை மீட்டெடுப்பதற்காக சிலுவைப்போர்களை நடத்தியது. ஹிட்லர் நடத்திய மாபெரும் யூத இனப்படுகொலை ஒரு தனித்த குரூரச் செயல் அல்ல. 'இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்' என்று சிலுவையின் அடியில் நின்று சொன்னார்களாம் யூத சமயத்தலைவர்கள். அவர்கள் தாங்களே தங்கள் தலையில் வருவித்துக்கொண்ட சாபத்தையே நிறைவேற்றுகிறோம் என்று சொல்லிச் சொல்லி பல நூற்றாண்டுகளாக யூத மக்களை இங்கு சிலர் அங்கு சிலர் என்று கிறிஸ்தவ சபை கொன்று வந்துள்ளது. அதன் உச்சக்கட்ட நிகழ்வே ஹிட்லர் ஈடுபட்ட இனப்படுகொலை. இதைவிடப் பெரிய அநியாயம், அராஜகங்களுக்கும் ஆதிக்க வெறிச் செயல்களுக்கும் சமயம் அளித்துள்ள ஆதரவு.

ஆபிரகாமுக்குக் கடவுள் கிழக்கே ஈராக் மேற்கே மத்தி யதரைக்கடல் ஆகிய எல்லைக்குள்ளடங்கிய நிலப்பரப்பு முழுவதையும் கொடுத்தார். எனவே அந்த நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்யும் எந்த நாட்டவரையும் இனத்தவரையும் விரட்டியடிப்பது எங்கள் கடமையென்று இஸ்ரவேல் நாட்டார் சிந்திக்கிறார்கள். இதற்கு வெகு அதிகமான கிறிஸ்தவ சபையின் ஆதரவும் உண்டு. பாலஸ்தீன அரபு மக்கள் படும் துயரங்கள் அவர்களுக்கிழைக்கப்படும் அநீதி கள் பலருடைய கண்களில் படுவதில்லை. ஆனால் அவர்கள் தங்கள் விடுதலைக்காக, சுதந்திரத்துக்காக ஈடுபடும் எதிர்ச் செயல்கள் பயங்கரவாதமென்று தீர்க்கப்படுகிறது.

ஆண் ஆதிக்கம் கடவுள் ஏற்படுத்திய சமுதாய ஒழுங்கு. அதை மீற யாருக்கும் உரிமையில்லையென்று சற்றேறக் குறைய எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. பிராமணிய இந்து சமயம் சாதிப்பிரிவினையையும்; உயர் சாதியினர் தலித்துகள் மேல் நிகழ்த்தும் அக்கிரமங்களையும் நியாமென் கிறது.

(தொடரும்)

உங்கள் ஆக்கங்கள், செய்திகள், விமர்சனங்களை அனுப்புங்கள்; தெளிவு கண்டு பிரசுரிப்போம். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், தெளிவு
குரு முதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

The Editor, Thelivu,
Archdeacons Office,
452, Main Street,
Jaffna.

## கொடிய குத்தகையாளன்!

முதலாளி ஒருவன் தன்னிலத்தில்
திராட்சைத் தோட்ட மொன்று வைத்து
தொழிலாளியிடம் குத்தகை பேசியே
ஒப்பந்தம் ஒன்று செய்திருந்தான்
வெளியூர் சென்றவன் நெடும் பயணம்
நீண்ட நாட்கள் எடுத்திடவே
பயனைப் பெற்று மீண்டுவர
பணியாள் ஒருவனை அனுப்பிவைத்தார்.

குத்தகைக் காரர்கள் வந்தவனை
நையப் புடைத்து அனுப்பிவிட்டார்
குத்தகைக் காரரின் கொடுஞ்செயலை
அறிந்து முதலாளி சினமடைந்தார்
தத்தம் முறையாய் இருபணியாளரை
குத்தகை பெற்றிட அனுப்பிவைத்தார்
பித்துப்பிடித்த குத்தகைக் காரர்கள்
அத்தனை பேரையும் அடித்துவதைத்தார்.

தனது மகனை மதிப்பரென்று இறுதியாய்
உறுதியாய் முதலாளி அனுப்பிவைத்தான்
முன்னே வந்தவர் ஊழியர்கள்
இவன்தான் சொத்துக்கு உரியனென்று
எண்ணிய கொடியவர் மகனையும் பிடித்து
அந்நியர் போலவே கொன்றனரே
பண்ணிய பாவத்தால் பாதகரை
தலைவன் பாதி வழியில் அகற்றிவிட்டான்.

ஏற்ற காலத்தில் பயனைப் பெற
ஏற்ற குடிவிடம் ஒப்படைத்தான்
ஏற்ற முறையில் செயற்படாவிட்டால்
இறையாட்சி எம்மிடம் பறிக்கப்பட்டு
ஏற்ற வேறோர் இனத்தாரிடம்
இறைவன் அதனைக் கையளிப்பார்
ஏற்ற விதத்தில் இறைவன் விரும்பிடும்

— அபிராகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான்

இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான் என நாட்டார் வழக் காற்றியலில் ஓர் பழமொழி உண்டு. இதை விளக்க ஓர் சம்பவம் இங்கு வழங்கப்படுகின்றது.

ஒரு மனிதன் இருந்தான் அவனால் யாருக்கும் எந்தவொரு சிறிய நன்மையும் கிட்டவில்லை. அவன் அந்த ஊரில் இருந்த யாரையும் நிம்மதியாக வாழ விடவில்லை. யாரும் இறந்தாலும் கூட அவர்களையும் விட்டு வைக்கவில்லை. அவன் யாரையும் விட்டு வைக்காது புகார் கூறுவான். சிறப்பாகப் பணி செய் யும் ஊரின் அதிகாரிகள் தலை வர்கள் பணியாளர்கள் அனைவரைக் குறித்தும் குற்றப் புகார்களை அனுப்பி அந்த புகார்களுக்கு பொய்த் தகவல்களை வழங்கி அவற்றிற்கு ஏற்ப பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்து விசாரணைகளில் அவர்களை மாட்டி விடுவான். எவர் மீதும் பயமின்றி அநியாயங்களைச் சுமத்தி குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிப் புகார்

-ஈனொக் பூ.புனிதராஜா.

கடிதங்களை அனுப்புவது, திட்டி - அடித்து துன்பம் விளைவிப்பது என அவன் அக்கிரமம் தொடர்ந்தது. இவனை யாரும் வழியில் கண்டால் "புகார் மன்னன்" எனக் கூறி இவன் பார்வையில் படாமல் பயந்து ஒளித்துக் கொள்வார்கள். ஊரில் யாரும் மகிழ்ச்சியாக இருந்தால் இவனுக்குத் தாங்க முடியாது, மனம் பொறுக்காது. அவர்களை ஏதாவது வம்பில் மாட்டி விடாமல் இவனுக்கு தூக்கமே வராது. இவ்வாறு இவன் பிறரைத் துன்பப்படுத்து வதில் நிறை மகிழ்வு கண்டான்.

ஓர் நாள் ஆழ்ந்த சிந்தனையில் இவன் மூழ்கி இருந்தபோது அவனுக்கு தன் மரணம் பற்றிய நினைப்பு வந்தது. தான் இறந்து விட்டால் என்ன நிகழும் என்ற பயமோ கவலையோ அவனுக்கு ஏற்படவில்லை. மாறாக திடீரென்று நான் இறந்தால் இந்த ஊரில் அனைவரும் நிறை மகிழ்வில் திளைப்பார்களே என எண்ணிய அவன் மிகவும் மனவருத்தமும் துன்பமும் அடைந்தான். ஊரார் தான் இறந்தாலும் மகிழ்வோடு இருக்கக்கூடாது என எண்ணினான். இந்த நினைப்பால் அவனுக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை. உறக்கம் இன்றித் தவித்தான். மனதிற்குள் ஓர் திட்டம் வகுத்துக் கொண்டு காலையிலே எழுந்து ஊராரையும் அதன் தலைவர்களையும் உற்சாகமாகச் சந்தித்தான். அவர்கள் அனைவருடைய கால்களிலும் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டபதாகக் கூறினான். தான் செய்த அனைத்திற்கும் மிக மிக மனம் வருந்துவதாகக் கண்ணீர் விட்டான். எல்லாரும் அவன் செயலைக் கண்டுமன நெகிழ்ச்சியடைந்தனர். கவலையை விடும்படி கூறினர். அதற்கு அவன் நான் உங்களுக்கு விளைவித்த துன்பங்களுக்குப் பரிகாரம் செய்ய விரும்புகிறேன். நான் இறந்ததும் என் உடலைத் தடியால் நையப் புடைத்து; என் உடைகளைக் கிழித்து; என் உடலைக் காலில் பிடித்து தெருத்தெருவாக இழுத்துச் சென்று; சுடுகாட்டை அடைந்ததும், அதன் மீது துப்பி; அங்கு எனக்கு எதிராகக் கெட்டவார்த்தைகளால் திட்டித் தீர்த்து பின் அடக்கம் செய்யுங்கள். இப்படிச் செய்தால் தான் என் ஆன்மா சாந்தியடையும் எனக்கூறி அவர்களிடம் இதை நிறைவேற்றுவதாக வாக்குறுதி தரும்படி வருந்திக் கேட்க ஊராரும் அவன் ஆத்ம சாந்திக்காக இதைச் செய்வதாக வாக்களித்தனர்.

இவன் மிக்க மகிழ்வுடன் வீட்டிற்கு வந்து ஓர் இரகசிய புகார் கடிதத்தை அரச பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு அனுப்பினான். அதில் தான் இறந்தால் அதற்குக் காரணம் இந்த ஊராரே எனவும், தன் மீது அவர்கள் மிகவும் வெஞ்சினம் கொண்டுள்ளதை தனது பூவுடல் அடக்கத்தில் நீங்கள் வந்து பார்த்து உண்மை நிலையை அறிந்து, முழு ஊராருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுங்கள் என எழுதி அனுப்பினான். கெடுவான் கெடுதல் நினைப்பான் என்ற முதுமொழிக்கு ஏற்ப சில நாட்களில் அவன் இயற்கையாகவே மரணமடைந்தான். ஊரார் அவனுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி அவன் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவனுக்கு வாக்களித்த படி அடி அடி என நையப்புடைத்து உடைகளை கிழித்து காலைப் பிடித்து தரதர வென இழுத்துச் சென்று மயானத்தில் காறி உமிழ்ந்து கொடும் வார்த் தைகளால் திட்டி அடக்கம் செய்தார்கள் இவற்றைக் கண்ட காவல்துறை அதிகாரிகள் ஊரார் அனைவரையும் கைதுசெய்து சிறையிலடைத்தனர். ஊரார் சிறையில் இருந்து கவலையுடன் கூறினர்

"அவன் இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான். நாம் தான் பாவப்பட்டு ஏமாந்தோம்" என்றனர். நாம் எவ்வாறு வாழ்கிறோம் எமது வாழ்வு எவ்வாறு உள்ளது என எண்ணி சுய பகுப்பாய்வு செய்ய இந்த நிகழ்வு நமக்கு அறை கூவல் விடுக்கின்றது. இன்றும் அரசியல் சமூக சமய பொருளா தார நிலைகளில் இருக்கும் தலைவர்கள் பலரது இருப்பு நிலையும் இறப்பு நிலையும் தீமை பயப்பதாகவே அமைந்திருக்கிறது.

நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தன் வாழ்வு பணிக் காலங்களிலும் மற்றவர்களுக்கு மிகப் பயனுள்ளதாகவும் வாழ்வு அளிப்பவராகவும் நொந்து நைந்து போனவர்களுக்கு ஆறுதல் அளிப்பவராகவும் வாழ்ந்தார். அவர் தன் இன்னுயிரையும் உலகின் மானிட விடுதலைக்காக மீட்கும் பொருளாக அளித்து அனைவருக்கும்நிலைவாழ்வு அளித்தார்.

இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார் இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம் அவர் இறந்தார் பாவத்தை ஒழிக்க ஒரே ஒரு முறை இப்பொழுது அவர் வாழ்கிறார். கடவுளுக்காகவே வாழ்கிறார்.

அவ்வாறே நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கொள்ளுங்கள். (உரோமர் 6: 9-11)

நாமும் கிறிஸ்துவை உடையவர்களாய் அவரில் வாழ்ந்தால் இருந்தும் வாழ்வோம் இறந்தும் வாழ்வோம் இருந்தாலும் இறந்தாலும் பயனுள்ளவர்களாவோம். ✦



# பெண்

சங்கீதா
வவுனியா

எந்த ஒரு மனிதனையும் உடலாலும் உள்ளத்தாலும் உருவாக்கும் தன்மை கொண்டவள் பெண். ஆதலினால் ஒரு சமுதாயத்தின் உயர்வுக்கும் உளவளர்ச்சிக்கும் பெண்களின் பங்கு இன்றியமையாததாயிருக்கிறது. மனைக்கு மங்கள விளக்கேற்றி மாட்சியுடன் மிளரச் செய்பவள் மங்கை. இல்லத்திற்கு ஒளியூட்டும் குலவிளக்கே பெண். இல்லறப் பணியைச் சீராய் நடாத்தி குடும்பத்திற்கும் குலத்திற்கும் ஒளியூட்டுபவள் மங்கை. மனையாட்சி மங்கை மாண்புடன் திகழ வேண்டும்.

இதனால் அன்றோ பாரதி பெண்ணாகப் பிறப்பதற்கு பெரும் மாதவம் செய்திட வேண்டுமம்மா என மாதர் பெருமையை விதந்து கூறுகிறார். இது எல்லாப் பெண்களுக்கும் பொருத்தமானதல்ல. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இத்தனையும் நிரப்பிய உயர் குணம் படைத்த உத்தமிகளுக்கே பொருந்தும்.

சுருங்கக் கூறின் குடும்பத்தைப் பொறுத்தவரை கணவனுக்குக் ஏற்ற மனைவியாக, பாசமுள்ள அன்னையாக, குடும்பத்தின் நலனைப் பொறுத்தவரை ஒரு நல்ல அமைச்சராக, சேவை செய்பவளாக, தன்னையே அர்ப்பணிக்கும் பண்புள்ளவளாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றது. ஏன் எல்லா உயிரினங்களையும் பெற்றெடுப்பது பெண்ணினம் சாக்கிரடீஸ், புத்தர், இயேசு, வள்ளுவர், ஏன் காந்தியையும் பெற்றெடுத்தது பெண்ணினம் தான்.

எனவே சமுதாயத்தை உருவாக்கும் பெரும் பொறுப்பு பெண்ணுடையதாக இருக்கிறது. இத்தகைய பெரும் பொறுப்புக்களை பெண் சிறப்பாகச் செய்ய வேண்டிய கடமைப்பாடு உள்ளவளாகிறாள் சமூகமும் இதனையே எதிர்பார்க்கிறது.

காலம் என்னும் கடலில் வாழ்க்கைப் படகு செல்கிறது. இவ் வாழ்க்கைப் படகிற்கு இருதுடுப்பு போன்றவர்கள் கணவனும் மனைவியும். இதில் மனைவி என்ற துடுப்பு நன்கு தொழிற் படா விட்டால் படகு திசை மாறிச் செல்லத் தொடங்கும். அத்துடன் சிறு காற்றுப் போன்றவற்றால் படகு கவிழ்ந்து விடலாம். சரித்திரப் பெண்கள் மாத்திரமன்றி ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய சொல்லினால் சமுதாயத்தின் மேன்மைக்கோ, தாழ்வுக்கு காரணமாக இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ✦

## வழிகாட்டிகளின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற அதேநேரம் குற்றங்களைக் கண்டித்துத் திருத்தவும் வேண்டும். சமூக பாகுபாட்டையும், சமூக அந்தஸ்து நிலையிலும் வைத்து பிள்ளைகளை நோக்காது அனைவரும் சமம் என்ற மனப்பான்மையுடன் அனைவர் மீதும் கரிசனைகாட்ட வேண்டும் என்றார்.

மேலும் இப்பெண்கள் மகா நாட்டில் அருட்சகோதரி லுமினா, யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.டொறின் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர். இதில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து பயனடைந்தனர்.

# வழிபாட்டிலும் மனித வாழ்விலும்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரிசனமாக துணை செய்கின்றன. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் நம்பிக்கை கொண்டோரின் கூட்டத்தினர் யாவரும் பாடல் வரிகளின் அர்த்தத்தினை உள்வாங்கி உணர்ந்து பாடுவதால் பயன்கள் பலவுண்டு. உள்ளுணர்வுகளுக்கு இசைந்தவையாக அமைந்துள்ள பாடல்கள் விசுவாசிகளின் உள்ளங்களைத் தொடுவதுடன் நடத்தைகளையும் மாற்றும் சக்தி கொண்டவை. எளிமையான இப் பாடல்கள் பாடுவதற்கும் அதன் பொருள் புரிவதற்கும் மிகமிக இலகுவானவை. இவை சமய வாழ்விலும் சமூக வாழ்விலும் முக்கியம் பெறுவதுடன் சமய உணர்வை வளர்க்கும் துறையாகவும் சிறந்த ஊடகமாகவும் உள்ளன.

திருச்சபை ஆற்றும் சடங்குகளுக்கு வியத்தகு மெருகூட்டி உள்ளங்களைக் கடவுளை நோக்கியும் உயர்ந்தவற்றை நோக்கியும் நகர்த்தக்கூடிய வல்லமை இப் பாடல்களுக்கு உண்டு. வழிபாட்டிற்கு பெருமையும் நம்பிக்கை கொண்டோரின் ஆன்மீக வளர்ச்சிக்கு துணைபுரியும் சிறப்பும் கொண்டது திருஇசை.

### கவனிக்க வேண்டியவை

பாடல்களின் பண்பு: இறைமாட்சி, மனிதமீட்பு

பாடல்களின் நோக்கு: விசுவாசத்தை வளர்த்தல், அன்பை ஏற்படுத்தல், செபிக்கத் துணை செய்தல்.

பாடல்களின் உள்ளிருக்கை: பொருள், ஆழம், சொற் தெளிவு.

### தற்காலப்போக்கு

சினிமா மோகத்தில் மூழ்கி அதன் மாயையில் சிக்கி அப் பாடல்களை அனுதினமும் அசைபோடும் கிறிஸ்தவர்களின் போக்கு வேதனையும் தேவனுக்கு பிரியமின்மையையும் அளிப்பதாகும். அர்த்தம் புரியாத தற்காலப் பாடல்களை அனுதினமும் நாம் ஆதரிக்கின்றோம். உணர்வுகளைக் கிளர்ந்து வக்கிரத்தை அள்ளித் தரும் இசையில் மயங்கி அவற்றையே அணைக்கின்ற போக்கு வேதனைதரும் செயலாகும். பாலியல் ஊக்கம் தரும் வசனங்களை விசனமின்றி ரசமாகருசிக்கின்றோம். புரியாத மொழி புகுத்தி மேலைத்தேய இசை புகுத்தி அதிகமான noice கூச்சல் கொண்ட பாடல்களைச் செவிக்கு விருந்தாக விரும்பி அனுமதிக்கின்றோம். அதிலும் கவலைதரும் விடயம் எம் சிறுவர்களுக்கு சினிமாப் பாடல்களையும் அதற்கான ஆட்டங்களையும் கற்றுக்கொடுப்பதில் சிலர் பெருமையும் அடைகின்றோம். தற்காலத்தில் அருமையான கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கப்பட்டாலும் சில பக்திரசம் இன்றி துள்ளிசையாக அமைவதையும் அவதானிக்க முடிகின்றது. பொருளுக்கும், சொற் தெளிவிற்கும் முக்கியம் கொடுபடாமல் மேற்கத் தேய இசைக்கருவிகளின் ஆதிக்கமே அதிகமாகக் காணப்படுகின்றது. இசையின் நோக்கமாகிய விசுவாசம், அன்பு, செபம் ஆகியவற்றை கருத்திற்கொள்ளத் தவறி தனி இசைரசம் மட்டுமே உள்ளிருக்கும் நிலைபபாடும் தற்காலத்தில் தலை தூக்கப் பார்க்கின்றது. எங்கே எம் ஆன்மீகம்? எங்கு செல்கின்றது எம் கிறிஸதவம்? என்னாவது எம் நம்பிக்கை?

### இம்மலரின் சிறப்பு

பாடலின் பண்பு, நோக்கு, உள்ளிருக்கை அனைத்தையும் தகுந்தவிதமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இப்பாடல் களை தனக்கே உரிய பாணியில் வடிவமைத்து பாடல்களை உட்புகுத்தியிருக்கும் பதிப்பாசிரியரும் தொகுப்பாசிரியருமான வி.பி. தனேந்திரா (யாழ்.ராதவல்லி) அவர்களின் இப்படைப்பு பாராட்டப்பட வேண்டியது, வளரும் விசுவாசிகளால் தொடரப்பட வேண்டியது. பழைய ஏற்பாட்டு மக்கள் இறை பிரசன்னம் மலைகளிலும் உயர்ந்த இடங்களிலும் இருப்பதை உணாந்தவர்கள். இறைவாக்கினர்களும் மலைகளிலே இறையோடு உரையாடினார்கள்; மக்களுக்கும் தாம் கண்டதை அனுபவித்ததை எடுத்துரைத்தார்கள். அந்த இறைப் பிரசன்னத்தை அனுதினமும் உணர்த்தும் உன்னத பணியை தன் அட்டைப்பட வடிவமைப்பில் இயற்கையை அமைத்திருப்பது அற்புதம். இது பார்ப்போரைக் கவந்திழுத்து தேடலுக்கு உட்புகுத்தி உள்ளிருப்பதையும் பாடுவதற்கு உந்துகின்றது. கிறிஸ்தவ மக்களிடையே பாவனையில் இருந்த இப்பாடல்களை ஒன்று சேர்த்து மீண்டும் மலச் செய்திருக்கும் பதிப் பாசிரியர் "மறுமலர்ச்சிப் பாடல்கள்" என்ற தலைப்பை தெரிந்துள்ளமை அருமையிலும் அருமை, காலத்தால் என்றும் மாறிடாமல், கருத்தினால் சற்றும் குறைந்திடாமல், படிப்போர் மனதில் சலித்திடாமல், மீண்டும் மீண்டும் மலர்ச்சியுடன் பாடக்கூடிய கருதாழம்மிக்க இலகுவான இப்பாடல்களை உள்ளடக்கியிருக்கும் இம் மலருக்கு மறு மலர்ச்சிப் பாடல்கள் தலைப்பு சாலப்பொருத்தமானதே.

உலகம் உண்டாகும் முன்பே ஆவியானவர் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார் என்ற தொடக்க நூல் வாக்கிற்கு ஏற்ப இந் நூலின் ஆரம்ப ஸ்தானத்தை ஆவியானவருக்கு அளித்திருப்பது பதிப்பாசிரியரின் இறையியல் அறிவின் ஆழத்தையும் மறை அறிவின் தெளிவையும் காட்டுகின்றது. "திருக்குமாரனின் பேரன்பு என்றும் பேரலையாய் என்மேல் மீண்டும் மீண்டும் வருகிறது. The love of Jesus comes over me Over and over like a mighty sea" என்ற இறுதிப் பாடலுடன் முடிவடைவது விசுவாசிகளுக்கு நம்பிக்கையும், மனத்தெம்பும், மனமகிழ்வும் அளிக்கும் அற்புத அமிர்தமாய் அமைகின்றது. இச் சிந்தனை அவரின் அறிவுசார் தன்மையாகும்.

எழுத்தாற்றலையும், மறைப்பற்றையும் தன்னகத்தே கொண்டு பிறருக்கு பயனுள்ளதை படைக்க வேண்டும் எனும் பரந்த நோக்குடன் உள்ளத்தில் உறுதிகொண்டு, நெஞ்சத்தில் வாஞ்சைகொண்டு வரைதலின் கவர்ச்சிகொண்டு இன்று படைத்தலின் புதுமையையும் கண்டுள்ளார் தொகுப்பாசிரியர் வி.பி. தனேந்திரா. இவரின் அருமையான இம் முயற்சிக்கு என் மகிழ்சசி நிறைந்த பாராட்டுக்களும் இறையாசி நிறைந்த வாழ்த்துக்களும்.

'முயற்சிகள் தொடரட்டும், சிந்தனைகள் சிறக்கட்டும், இறைதுணை உம்மோடு இருக்கட்டும் படைப்புகள் மென்மேலும் பிறக்கட்டும், இன்றைய தலைமுறை உம்பாதை தொடரட்டும்"

கிறிஸ்தவ உணர்வால் நிரம்பி கிறிஸ்தவ பண்புகளையும், மரபுகளையும் கொண்டிருப்பதுடன், திருவிவிலியத்தையும் மூல நூலாகக் கொண்டுள்ள இப்பாடல்கள் அனைவராலும் அனுதினமும் ஆனந்தமாய் அனுபவித்துப் பாடப்பட வேண்டியவை. நாளைய தலைவர்களாய் மலரவிருக்கும் இன்றைய சிறுவர்களுக்கு சாலப்பொருத்தமான இப்பாடல்கள் சிறப்பானவிதமாக இவர்களின் ஆன்மீக வாழ்வுக்கு வலுவூட்டுவதற்கு உதவுவது பெரியோரின் பாரிய பொறுப்பும், தலையாய கடமையும் ஆகும். இப்பாடல்கள் திருவழிபாடுகளுக்கு மெருகும், மனித உறவுகளுக்கு வலுவும், இறையாசிபெற வழியுமாய் அமையும் என்பது என் நம்பிக்கை. இவற்றைப் பாடுவதால் விரக்தியில் - உறுதியும், ஏமாற்றத்தில் - நம்பிக்கையும் - தோல்வியில- ஜெயமும், சுமைகளில் - சுகமும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. பாடிப் பயனடைய ஆசித்துநிற்கின்றேன என்றார் அருட் சகோதரன் யேசுதாசன். (அ.ம.தி)

அருட்பணி அ.ஸ்ரீபன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நூல் ளியீட்டு விழாவுக்கு யாழ். குருமுதல்வர் எஸ்.பி.நேசகுமார் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதுடன், நூலினையும் வெளியீட்டு வைத்தர். நூலின் முதற்பிரதியினை உதவி கல்வி அதிகாரி இராமலிங்கம் பெற்றுக்கொண்டார்.

மேலும் இந்த விழாவில் திருமதி ஆர்.இராமலிங்கம், திரு.ஆ. நவநீதகிருஷ்ணன், திரு.எஸ்.பி. ஜீவானந்தம், நூலின் தொகுப்பாசியரியர் வி.பி.தனேந்திரா ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர்.

## நம்பிக்கைக்குரிய....

(1 ஆம் பக்கத் தொடர்)

இல்லை, பாதிக்கப்பட்டவர்கள் பக்கம்நின்று பாடுபடுபவ ராக இருக்கிறார்.

உலகத் தலைவர்கள் வஞ்சகம் நிறைந்தவர்கள். அவர்கள் வாக்குறுதிகளில் மயங்கி ஏமாற் றப்பட்டாலும், இயேசு எமது தலைவனாக இருக்கின்றார். அவர் வழியை பின்தொடர்ந்து நல்ல தலைவர்களை உருவாக்கவும், குடும் - சமூக - வாழ்வில் நாம் நல்ல தலைவர்களாக மிளிரவும் முயற்சிப்போம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை.

இல.452, பிரதான வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள 'தெளிவு வட்டத்'தினால், இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள 'சுரபி' பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியீடப்பட்டுள்ளது. ஆசிரியர்:வி.பி.தனேந்திரா.